**செய்தி வெளியீடு எண்: 155** **நாள் : 14.04.2015**

**சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு விழா**
**நாள் : 14.04.2015**

தமிழ்நாடு அரசு சார்பாகச் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விழா 14.04.2015ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகக் கூட்ட அரங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்கள், திருக்குறள் முற்றோதல் செய்த பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 36 மாணவர்களுக்கு ரூ.10,000/– பரிசுக்கான காசோலைகள் வழங்கியும், பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை,பேச்சுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கியும், தமிழில் 36 வகைப்பாடுகளில் சிறந்த நூல்கள் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தார்கள் என மொத்தம் ரூ.28,32,000/– மதிப்புள்ள பணப் பரிசுகளை 171 பேருக்கு வழங்கியும் விழாச் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது ‘‘மக்களால் நான் மக்களுக்காக நான்’’ என உரைத்து தமிழ்ச் சமூகம் வாழ்ந்திட வாழ்ந்து வரும் தமிழர் வரலாற்றின் பொன்னேடு. பூமகள் ஈன்ற புண்ணியம் அல்லும் பகலும் அருந்தமிழ்நாட்டை உயர்த்தி நிற்கும் மலைமகள் நாளொரு பொழுதும் பொழுதொரு வண்ணமும் அன்னைத் தமிழ்நாட்டிற்கு உழைத்து வரும் அற்புதத் தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி மகிழ்கிறேன். அம்மா அவர்களால் மீட்டெடுக்கப்பட்ட தமிழ்ப் புத்தாண்டு விழாவில் கலந்து கொள்ளுவதிலும் அவரை இந்நேரத்தில் மீண்டும் ஒருமுறை வணங்கி மகிழ்வதிலும் பெருமை அடைகிறேன்.

மக்கள் நலன் கருதி நல்ல பலத் திட்டங்களை நாள்தோறும் அறிவித்தும் செயற்படுத்தியும் வரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் சிந்தனைகள், அறநெறிக் கருத்துக்கள், எங்களை வழிநடத்திச் செல்லும் எங்களின் ஆதாரங்களாகும்.

சங்கக் காலத்தில் இருந்தே தமிழறிஞர்கள் வாழ்க்கையில் சித்திரைத் திங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. தமிழர்கள் பொன்னேறு உழவு, திருவிழா போன்ற நற்பணிகளை சித்திரைத் திங்களில் தொடங்கியதாக சிலப்பதிகாரம், நெடுநல்வாடை போன்ற இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. சித்திரைத் திங்களை **வசந்த காலத்தின் வாசல்** என்று தமிழறிஞர்கள் கூறுகின்றனர்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்** – என்ற குறளுக்கு ஏற்ப தமிழ்நாட்டு மக்கள், இன்றைக்கு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை தெய்வமாக வணங்கி வாழ்த்துகின்றனர்.

மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் தமிழறிஞர்கள் மற்றும் பொது மக்களின் விருப்பத்தையும் வேண்டுகோளையும் ஏற்று சித்திரை முதல் நாளினை தமிழ்ப்புத்தாண்டாகக் கொண்டாட ஆணையிட்டதற்கு இணங்க 2012ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இன்றைய விழா நடைபெற்று வருகிறது.

கலைமகளாய், அலைமகளாய், மலைமகளாய் மூன்றும் ஒருங்கிணைந்து எங்கள் தெய்வத் திருமகளாய் தொட்ட இடம் துலங்க வரும் தாய்க்குலமாய், பொன்மகளாய்த் தமிழ்ப்புத்தாண்டை மீட்டெடுத்து தமிழ் மக்களின் நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சி பொங்க தமிழர் திருநாளை தமிழ்ப் புத்தாண்டை உலக மக்கள் எல்லாம் வியந்திடும் வகையில் மீட்டுத் தந்திட்ட தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்தில் நீக்கமற நிறைந்து இருப்பவரும், சிங்கத்தின் எழுச்சிக் கொண்டு தமிழின் ஒளி கொண்டு, தருமத்தின் வாழ்வு கொண்டு நீதி தேவதையாய் எங்களை எல்லாம் செயல்படுத்தி வரும் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவுரைக்கிணங்கவும் வள்ளுவரின்

**கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி** – என்ற குறளின் பொருளுக்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடியொற்றி நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு விழா தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் சிறப்புமிக்க சிந்தனையில் சிறந்தோங்கிய இந்த சித்திரைப் புத்தாண்டு விழா பழந்தமிழ்ப்பெருமையை போற்றச் செய்கிறது எனலாம்.

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு** என்ற வள்ளுவனின் சிந்தனையை தனது மேலோங்கிய செயல்பாட்டால் செயல்படுத்தி வருகிறார் எங்களின் மக்கள் முதல்வர் அம்மா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத் தமிழறிஞர்கள் போற்றுகின்ற அளவில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை தஞ்சாவூரில் நடத்தி இயல், இசை, நாடகம் என்று முத்தமிழோடு அறிவியல் தமிழையும் கொண்டு வந்து தமிழர்களுக்கு பெருமை சேர்த்ததோடு தில்லி தமிழ்ச் சங்கத்திற்கும் புத்துயிர் ஊட்டி பெருமை சேர்த்தவர் எங்களின் மக்கள் முதல்வர் அம்மா அவர்கள்.

சித்திரை முதல் நாளை முத்திரை படைத்த நாளாக அறிவிக்கச் செய்து இத்தரை மீது சரித்திரம் படைத்த சாதனைத்தலைவி மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா ஆவார்.

அம்மா ஆட்சியில்தான் ‘ஆல்சுசாலை’ தமிழ்ச்சாலை ஆனது. தன்னிகரில்லாத் தமிழ்ப்பல்கலைக்கழகம் புதுப்பொலிவு பெற்றது. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் பல்வேறு திட்டங்களால் வளர்க்கப்பட்டது. பல்வேறு அரிய நூல்கள் வெளியிடப்பெற்றன. உலகத்தமிழ்ச்சங்கத்திற்கு ரூ.25கோடியில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. அயல்நாடுகளுக்கு தமிழ் வளர்க்க அறிஞர்கள் சென்றனர். சங்கத்தமிழ் காட்சிக்கூடம், திருக்குறள் ஓவியக்காட்சிக்கூடம், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் ஆகியவை விரைவில் திறக்கப்படவுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ் வளர்தமிழாக தமிழ்நாட்டில் அனைத்துத்துறைகளிலும் மிளிர்ந்து வருகிறது.

உலகத்தின் எந்த மூலையிலும் தமிழர்கள் இன்னல்பட்டாலும் முதல் குரல் கொடுத்தவர், கொடுப்பவர் எங்களின் மக்கள் முதல்வர் அம்மா அவர்கள்.

அன்றைய ஆட்சியாளர்கள் தமிழைச் செம்மொழி என்ற பெயரிட்டு ஒட்டு மொத்தமாக குடும்பத்தோடு கோவையிலே கும்மாளம் அடித்ததை எக்காலமும் தமிழறிஞர்கள் மறக்க மாட்டார்கள். தமிழகத்தின் வாழ்வாதாரத்தை விட்டுக் கொடுத்தவர் அன்றைய முதலமைச்சர். அதைப் பெற்றுத் தந்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்று கூறி இந்நாளில் அம்மா அவர்களின் ஆணையின்படி இங்கு பரிசு பெறும் மாணவச் செல்வங்களையும், நூலாசிரியர்களையும், பதிப்பகத்தார்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்துத் துறைகளிலும் அன்னைத் தமிழ் ஓங்கி வளர்ந்திட நாம் அனைவரும் உழைத்திட இந்நாளில் உறுதி ஏற்போம் என்று கூறினார்.

முன்னதாக, வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி– செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப அவர்கள் பேசுகையில் **"பணியுமாம் என்றும் பெருமை"** என்ற உலகப் பொதுமறை கூறியதற்கேற்பத் திகழும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களே !

**"சித்திரையே வா! நம் வாழ்வில் முத்திரை பதிக்க வா!"** என்ற தொடரே, சித்திரை மாதமே தமிழ்ப் புத்தாண்டு என்பதற்குச் சான்றாகும். இதை சோழர் கல்வெட்டுகளும் கொங்கு, பாண்டியர் கல்வெட்டுகளும் உறுதி செய்கிறது.

தமிழ்ப் புத்தாண்டு தினம் சித்திரையில் கொண்டாடப்படுவது திராவிடப் பண்பாடு ஆகும். அதனால்தான், தமிழர்கள் சித்திரை முதல் நாளில் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாட, சில தினங்கள் முன்போ பின்போ ஆந்திர, கர்நாடக மற்றும் கேரள மாநிலத்தவர் "யுகாதி" என்றும் "விஷு" என்றும் புத்தாண்டைக் கொண்டாடி வரவேற்கிறார்கள்.

இதைப் போலவே, பிகார், ஜார்க்கண்ட், காஷ்மீர், மகாராஷ்டிரம், கோவா, வங்காளம், அசாம், பஞ்சாப், ஹரியானா, மணிப்பூர், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் சித்திரை மாதத்தை ஒட்டியே புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.

இந்தியா முழுவதும் இந்தப் பருவத்தில் புத்தாண்டு தினத்தைக் கொண்டாடுவது, **நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே** அடையாளமாக அமைகிறது.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்தில் நடைபெறும் சித்திரைத் திருவிழா உலகம் முழுவதும் போற்றப்படும் திருநாளாகும். மதுரை கள்ளழகர் உலா புறப்பட்டு, ஆற்றில் இறங்கி, அகிலத்தோர் எல்லாருக்கும் அருள்பாலிப்பதும் இந்த நாளில்தான். திருவாரூர் தேர்த் திருவிழா சித்திரை மாதத்தில் கொண்டாடப்படுவது ஆண்டாண்டு கால வழக்கம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சி செய்த உத்தம சோழரின் செப்பேடுகளும், முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டுகளும் சோழநாட்டின் கோயில்களில் சித்திரைத் திருவிழா எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதை அறியத் துணைபுரிகின்றன. அந்தக் காலத்தில் சித்திரைத் திருவிழாவிற்காகச் சிறப்புக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் சித்திரைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என 2012ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு முதல் அந்நாள் அரசு விழாவாக தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகின் மூத்த மொழி தமிழ். 2500 ஆண்டுகளுக்கு மேலான இலக்கிய மரபுடையது தமிழ் மொழி. இலக்கிய சான்றுகள் மூலமும் அறிவியல் சான்றுகள் மூலமும் உலகின் முதல் மனிதன் பேசியது தமிழ் மொழியே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உடைய மொழிகள் ஆறு மொழிகள் மட்டுமே. அவை 1. தமிழ், 2. சீனம், 3. சமஸ்கிருதம், 4. இலத்தீன், 5. ஹீப்ரு, 6. கிரேக்கம் இந்த ஆறு மொழிகளுள் தமிழ் மொழி மட்டுமே மனித சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளை மிகத் தெளிவாக உணர்த்தும் ஆற்றல் கொண்டது என அறிஞர் கூறுகிறார்கள்.

வரலாற்றுத் தொன்மையும் இலக்கியச் சிறப்பும் மிக்க உலக மொழிகளில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ளது தமிழ் மொழி. உலகின் தொன்மையான மொழிகள் பல இன்று வழக்கில் இல்லாமல் போனாலும் இன்றும் தனது சீரிளமைத் திறம் குன்றாமல் உள்ள மொழி தமிழ் மொழி.

தமிழ்மொழி கிரேக்கத்தைவிடப் பண்பட்டது. இலத்தீனைவிட அழகானது. ஆங்கிலத்தைவிட ஆற்றல் வாய்ந்தது. இத்தாலிய மொழியைவிட இனிமையானது. எபிரேயத்தைவிடப் பழமையானது என்றெல்லாம் பிற நாட்டு மொழி வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

சிறந்த நூல் பரிசு பெற்ற நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தாருக்கும் குறள் பரிசு பெற்ற மாணவச் செல்வங்களுக்கும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தமது உரையில் கூறினார்.

விழாவில், மேனாள் அரசவைக் கவிஞர் திரு. முத்துலிங்கம் அவர்கள் தலைமையில் 'தாயே தமிழே' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கில் கவிஞர் சினேகன், கவிஞர் கவிதாசன், கவிஞர் தங்க காமராசு, கவிஞர் பா.கிருஷ்ணன், கவிஞர் மலர்விழி, கவிஞர் சி. ரேகா மற்றும் செல்வன் கோ. மணிகண்டன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

அதனைத் தொடர்ந்து கலைமாமணி கு. ஞானசம்பந்தன் அவர்கள் தலைமையில் நாடு போற்றும் நான்காண்டு ஆட்சியில் விஞ்சி நிற்பது தமிழ் வளர்ச்சியா? தமிழக வளர்ச்சியா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இப்பட்டிமன்றத்தில் தமிழ் வளர்ச்சியே என்ற தலைப்பில் கவிஞர் தங்க மூர்த்தி, பேராசிரியர் அர்ச்சனா கார்த்திகேயன், கவிஞர் மலர்விழி ஆகியோரும் தமிழக வளர்ச்சியே என்ற தலைப்பில் கவிஞர் கோவேந்தன், பேராசிரியர் விசயசுந்தரி, பேராசிரியர் விமலா அண்ணாதுரை ஆகியோரும் பேசினார்கள்.

விழாவின் நிறைவாக, தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**